**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109499

1. District : Trichy மாவட்டம்   PS: V & AC காவல்நிலையம்   Year: 2023 ஆண்டு   FIR No.: 7 மு.த.அ. எண்   Date: 3.5.2023 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act-1988 (as amended in 2018)   Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : 2.5.2023 நாள் முதல்   Date to : 16.45 hrs. நாள் வரை
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 3.5.2023 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்   Time : 10.00 hrs. நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலமாக தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடமேற்கு சுமார் 1 கி.மீ
   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. மனோஜ்குமார் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்   (b) Father's/ Husband's Name : ரங்கநாதன் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 21.8.1985 நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : இந்தியன் நாட்டினம்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழிலாளர் தொழில் சட்ட ஆலோசகர்   (g) Address : 26/3, திருவடி தெரு, ஸ்ரீரங்கம், திருச்சி-6 முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   தி. கார்த்திக், தொழிலாளர் உதவி ஆய்வாளர், சரகம்-1, திருச்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 03/05/2023.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(G. SAKTHIVEL)
Inspector of Police
Name: பெயர் V&AC
Rank: நிலை ......................No. எண் ..........
Trichy

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.05.2023

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2023–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று **03.05.2023** பணியில் இருந்த போது காலை **10.00** மணியளவில் திருச்சி–**6**, ஸ்ரீரங்கம், எண்.**26/3**, திருவடித் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் த/பெ ரெங்கநாதன் மகன் திரு.R.மனோஜ்குமார், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தகவல் தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம் சரகம்–1ல் உதவி ஆய்வளாராக பணிபுரியும் திரு.கார்த்திக் மற்றும் புகார்தாரர் திரு.மனோஜ்குமார் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று **03.05.2023** பிற்பகல் **12.30** மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.**7/2023** சட்டப்பிரிவு **7(a)** ஊழல் தடுப்பு சட்டம் **1988** (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் R.மனோஜ்குமார், த/பெ ரெங்கநாதன், எண்.**26/3**, திருவடித் தெரு, ஸ்ரீரங்கம், திருச்சி–**6**. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி. ஐயா, நான், திருச்சி, ஸ்ரீரங்கம், திருவடித் தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் B.Com., M.C.A., M.B.A., படித்துள்ளேன். நான் தொழிலாளர்கள் வேலை செய்யும் நிறுவனங்களுக்கு, தொழிலாளர் சட்ட ரீதியான ஆலோசகாரக (HR Consultant (Statutory) Service) சேவைபுரிகிறேன். திருச்சி, வில்லியம்ஸ் ரோட்டில் உள்ள SNIPS SOLUTION Pvt. Ltd., என்ற தனியார் நிறுவனத்திற்கு கடந்த மார்ச்–**2022** முதல் தொழிலாளர் சட்ட ரீதியான ஆலோசகராக உள்ளேன். நான் மேற்படி நிறுவனத்திற்காக தொழிலாளர் துறை அலுவலகத்திற்கு அலுவல் பணியாக சென்று வருவேன். நான் சட்ட ஆலோசகராக உள்ள SNIPS SOLUTION Pvt. Ltd., நிறுவனத்திற்கு **15.03.2023** அன்று தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு.கார்த்திக் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, மேற்படி நிறுவனத்தில் முன்பண பதிவேடு(P), வருகை பதிவேடு(Q), சம்பள பதிவேடு(R), சம்பள ரசீது(S), வேலை நேர குறிப்பேடு(T) மற்றும் ஆய்வாளர் குறிப்பேடு ஆகிய பதிவேடுகள் ஆய்விற்கு கேட்டும் கொடுக்கவில்லை என்று தெரிவித்து, அவரது ஆய்வு தொடர்பாக, **30.3.2023** அன்று தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்திலிருந்து ஆய்வு அறிக்கை உத்தரவு கொடுக்கப்பட்டது. அந்த நிறுவனத்திலிருந்து எனக்கு தகவல் தெரிவித்தார்கள். **31.03.2023** அன்று அந்த நிறுவனத்தின் லெட்டர்பேடில், திருச்சி, தொழிலாளர் உதவி

ஆய்வாளர் ஆய்வில் தெரிவித்த பதிவேடுகளின் நகல்களையும் இணைத்து 3.4.2023 அன்று மாலை திருச்சி, தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தில் கொடுத்துவிட்டு, திருச்சி சரகம்-1 தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு.கார்த்திக் அவர்களை சந்தித்தபோது, அவர், நான் பதிவேடுகளை சரிபார்த்த பிறகு கூப்பிடுகிறேன் என்று தெரிவித்தார். அதன்படி 2.5.2023 காலை சுமார் 11.45 மணியளவில் திருச்சி சரகம்-1 தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு.கார்த்திக் அவர்கள், என்னை அவரது தொலைபேசியிலிருந்து தொடர்பு கொண்டு, தன்னை மாலை சந்திக்கும்படி தெரிவித்தார். அதன்படி நான் 2.5.2023 மாலை சுமார் 4.45 மணியளவில் திருச்சி தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம் சென்று, சரகம்-1 தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு.கார்த்திக் அவர்களை சந்தித்தேன். அவர் என்னிடம், நீங்கள் பதிவேட்டின் நகல்களை மட்டும் கொடுத்துவிட்டு சென்றுவிட்டீர்கள், நான் நினைச்சா, உங்கள் நிறுவனம் பதிவேடுகளை சரியாக பராமரிக்கவில்லை எனக்கூறி அபராத தொகை விதிக்க முடியும் தெரியுமா என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், சார் பதிவேடுகள் எல்லாம் சரியாதான் மெயின்டெயின் பண்ணுகிறோம் என்று தெரிவித்தேன். அதற்கு அவர், அதெல்லாம் சரி, எல்லா கம்பெனிங்களும் எங்களை முறையா கவனிச்சிடுறாங்க, ஆனா நீங்க மட்டும் எங்கள கண்டுக்க மாட்டேங்கிறீங்க, நான் நெனச்சா உங்க நிறுவனத்திற்கு எப்படி வேணும்னாலும் ஃபைன் போடலாம் தெரியுமா என்று சொல்லிவிட்டு, எனக்கு தனியாக ருபாய் 15,000 கொடுத்திடுங்க, உங்கள் நிறுவனத்திற்கு எந்த அபராத தொகையும் போடாம நடவடிக்கை எடுக்காம பாத்துக்கிறேன் என்று பணம் கேட்டு வற்புறுத்தினார். அதற்கு நான் அவரிடம் சரிங்க சார், நிறுவனத்தில் சொல்லிவிட்டு வந்து உங்களை பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இந்த விசயத்தை SNIPS SOLUTION Pvt. Ltd., Management-ல் தெரிவித்தேன். அதற்கு அவர்கள் எங்களோட Legal Work அனைத்தும் நீங்கதான் பார்க்கிறீங்க, அதனால நீங்க எது செஞ்சாலும் சரிதான் என்று சொல்லிவிட்டு, லஞ்சம் எதுவும் கொடுக்கவேண்டாம் என கூறிவிட்டார்கள். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. அதனால் என்னிடம் லஞ்சம் கேட்ட திருச்சி, சரகம்-1, தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு.கார்த்திக் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (R.மனோஜ்குமார்) 03/05/2023. Submitted to the Court of the Hon,ble Special Judge, Special Court for the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 10.00 hrs. on 03.5.2023 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.7/2023; u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 1230 hrs. on 03.05.2023. Sd.xxx (G.SAKTHIVEL) 3.5.2023 Inspector of Police, V&AC, Trichy.

G. [signature] 3.5.2023
(G.SAKTHIVEL)
Inspector of Police,
V&AC